වාර්ෂික වාර්තාව සහ ගිණුම්

வருடாந்த அறிக்கையும் கணக்கு அறிக்கையும்

ANNUAL REPORT AND ACCOUNTING

2021



ශ්‍රී ලංකා සමාජ ආරක්ෂණ මණ්ඩලය

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

SRI LANKA SOCIAL SECURITY BOARD

මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි, ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා
හා ව්‍යාපාර සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில்
மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance,
Self Employment and Business Development

உள்ளடக்கம்

I.	தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கூற்று	03
II.	தவிசாளர் அவர்களின் செய்தி	04
III.	பொதுமுகாமையாளர் அவர்களின் செய்தி	05
IV.	முன்நாள் தவிசாளர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும்	07
V	2021 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை	08
VI.	இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் நிறுவனஞ்சார் கட்டமைப்பு	09
VII.	இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் கடமைப் பொறுப்பு	10

1.	**நிர்வாகப் பிரிவு . . . . . .**		12
	1.1	நிறுவுதல், அலுவலகங்களைத் தாபித்தல் மற்றும் மாற்றங்கள்	12
	1.2	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடங்கள்	13
	1.3	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை அதிகரித்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.	15
	1.4	2021 ஆம் ஆண்டில் விலகல் மற்றும் ஓய்வுபெறுதல்	15
	1.5	நிர்வாகப் பிரிவின் தற்போதைய பதவியணி	16
	1.6	நிர்வாகப் பிரிவின் பிரதான செயற்பாடுகள்	16
	1.7	பௌதிக வளங்கள்	18
	1.8	தொடர்பாடல் வசதிகள்	19
	1.9	போக்குவரத்து வசதிகள்	19
	1.10	தற்போதுள்ள வாகனங்களின் விவரங்கள்	20
	1.11	குறிப்பாக கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்	22
	1.12	தகவல் தொழில்நுட்ப அலகு	23
	1.13	2021 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப அலகினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்	23
	1.14	தகவல் தொழில்நுட்ப அலகின் பதவியணி	23
2.	**சமூகப் பாதுகாப்புப் பிரிவு . . . . . .**		24
	2.1	பிரதான செயற்பாடுகள்	24
	2.2	நிதிசார் நலன்களை வழங்குதல்	24
	2.3	சேவை அலகுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்	25

2.4	பிரேரணைத் திட்டம் அமுல்படுத்துதல் மற்றும் தொடர்புபடும் உத்தியோகத்தர்கள்	25
2.5	சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பதவியணி	25
2.6	2021 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் முன்னேற்றம்.	26
2.7	2021 ஆம் ஆண்டின் நிதிசார் நலன்களை வழங்குதல்	29
2.8	2021 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம்	29
2.9	2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள்.	29
2.10	சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரச்சினைகள்	30
3.	**நிதிப் பிரிவு . . . . . .**	31
3.1	பொதுவான விடயங்கள்	31
3.2	நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள்	32
3.3	2021ஆம் ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகள்	32
3.4	நிதிப் பிரிவின் பதவியணி	32
4.	**உள்ளகக் கண்காய்வுப் பிரிவு . . . . . .**	33
4.1	விடயப் பரப்பு	33
4.2	கடமைப் பொறுப்பு	33
4.3	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம்	34
4.4	2021 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள்	35
4.5	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணி	35
5.	**நன்றி நவிலல் . . . . . .**	36

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

தொலைநோக்கு

"சமூக பாதுகாப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட அபிமானத்துன் கூடிய ஒரு தேசம்"

செயற்பணி

அபிமானத்துடன்கூடிய தேசத்தினைக் கட்டியெழுப்பும் முகமாக சமூக பாதுகாப்புக்கொள்கையை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதன்மூலம் நல்லாட்சிக் கொள்கையை பின்பற்றி இலங்கைவாழ் மக்களின் பொருளாதார, சமூக, கலாசார, பாதுகாப்புக்கென அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் மூலோபாயத் தொடர்புகளை கட்டியெழுப்பி நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிச் செல்லுதல்.

தவிசாளர் அவர்களின் செய்தி

1996 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டு, நிதி அமைச்சு, சமுர்த்தி, மனைப்பொருளாதாரம், நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை இயங்குகின்றது. குறித்த சபையானது, அரச ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற பிரசைகளின் பொருட்டு ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்கள் உறுதிப்படுத்துவதைத் தனது முதன்மைக் கடமையாக கொண்டுள்ள அரச நிறுவனமாகும்.
2021 ஆம் ஆண்டில் தனது 25 ஆவது ஆண்டு நிறைவை இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை பூர்த்தி செய்தது. நிறுவனத்திற்கு இவ்விடயம் குறிப்பிடத்தக்கதாக அமைந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு முழுவதும் கொவிட் 19 தொற்றுநோய் நிலவியதால் மிகவும் சவாலான ஆண்டாக அமைந்தது.

2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையானது, நிலவிய கட்டுப்பாடுகளின்கீழ் சவால்களற்ற ஆண்டுகளில் அடைந்துக்கொண்ட முன்னேற்றத்தை விஞ்சி 2021 ஆம் ஆண்டில் சாதகமான முன்னேற்றத்தை அடைந்துக் கொண்டுள்ளது. சபை தனது சேவை வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தியது மட்டுமின்றி, பல புதிய இலக்கு குழுக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்ய புதிய ஓய்வூதியத் திட்டங்களை அறிமுகப்-படுத்தியது. அத்துடன் புதிய ஓய்வூதியத் திட்டங்களை அறிமுகப்படுத்தி நலன்பெறுகின்ற பயனாளிகளின் வரம்பை மேலும் விரிவுபடுத்துவதற்குத் தேவையான அடிப்படை வேலைகளையும் இவ்வாண்டில் நிறைவு செய்தது.
அதன்படி இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையால் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் 57,803 புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு, 25 வருட வரலாற்றில் 450 மில்லியன் ரூபாவை அதிகூடிய நிதித் திரட்சியாகப் பதிவு செய்துள்ளது.

கடந்துமுடிந்த 2021 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்புச் சபை தமது சேவை வலையமைப்புகளை விரிவாக்குவதற்காக நாடளாவிய ரீதியில் பிராந்திய அபிவிருத்தி வங்கிக் கிளைகளை, சமூக பாதுகாப்புச் சபையின் சேவை நிலையங்களாக அபிவிருத்தி செய்தல், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, சமுர்த்தி வங்கி கிளைளின் சேவை வலையமைப்புடன் இணைத்துக்கொள்ளுதல், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் என்பன இவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க அடைவுகளாகும்.
இந்த ஓராண்டு காலப்பகுதியின் போது, பல புதிய இலக்குக் குழுக்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இது போன்ற பல புதிய இலக்குக் குழுக்களை உள்ளடக்கிகொள்வதற்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கிடையில், வணிகக் கப்பல் போக்குவரத்து துறையில் ஈடுபட்டுள்ள மாலுமிகளுக்கான "மாலுமி" சமூகப் பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது, "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை கூற்றில் பிரேரணை செய்துள்ள வகையில் புத்தசாசனம் நிலைபெறுவதற்காக சாசனத்திற்கு தமது பிள்ளைகளை தியாகம் செய்துள்ள வணக்கத்திற்குரிய பிக்குகள் மற்றும் தசசில் தாய்மார்களின் பெற்றோருக்கு "புதுபுத் மாபிய ஹரசர" ஓய்வூதிய திட்டமும், சமூகப் பாதுகாப்புத் திட்டமும் அறிமுகப்படுத்தல், சுரங்க கைத்தொழில் சார்ந்த சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் பணியாற்றும் ஆலயங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்பனவும் தொடங்கப்பட்ட சில திட்டங்கள் மட்டுமே ஆகும்.
அதேபோன்று ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் இறுதிக்கட்டத்தில் உள்ள திட்டங்களில் கௌரவ பிக்குகளுக்கான 'புதுபுத் ஹரசர' சமூகப் பாதுகாப்புத் திட்டம், தனியார் பேருந்து ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் மற்றும் சௌபாக்யா புதிய ஓய்வூதியத் திட்டம் ஆகியவை முதன்மை வகிக்கின்றன.

அரசு ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியற்ற மக்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், முன்னேற்றத்தை தொடரவும், ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்களை சமூகமயமாக்கவும் இந்த நிலையான திட்டத்தை மேலும் வலுவூட்டுவது எனது நோக்கமாகும்.

25 வருடங்களுக்கும் மேலாக செயற்பட்டு வரும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் அனைத்து உத்தியோகத்தர்களின், ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு அளப்பரியா-ததாகும். இதுவரை காலம் மக்களுக்கு பணியாற்றி குறித்த சாதனைகளை அடைவதற்கு உறுதுணையாக இருந்த எல்லா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றென்.

தவிசாளர்,

சமன் கந்தராகம,

சிரேட்ட விரிவுரையாளர் – சமன் ஹந்தராக , இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

பொது முகாமையாளரின் அவர்களின் செய்தி

2020 ஆம் ஆண்டில் புதிதாக நியமனம்பெற்ற தவிசாளர் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக, பணிப்பாளர் சபை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்குழுவின்கீழ் அமைக்கப்பட்ட அத்திவாரத்தை மேலும் வலுவூட்டி தமது இலக்குகளை மிக உயர் மட்டத்தில் சாத்தியமாக்கிய ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாக 2021 ஐ விவரிக்க முடியும்.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை 2021ஆம் ஆண்டை அதன் வரலாற்றில் அதிக வருமானம் ஈட்டிய ஆண்டாக பதிவுசெய்துள்ளது. அதேபோன்று ஒரே ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான செயலில் உள்ள அங்கத்தவர்களைக் கொண்ட ஆண்டாகவும் பதிவுசெய்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் 150பேர் என்ற வரையறைக்குட்பட்டிருந்த சமூகப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களுக்காக அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற உத்தியோகத்தர் வலையமைப்பானது, மொத்த நாட்டையும் ஆட்கொண்டு 40,000 ம் விஞ்சிய ஆட்சேர்ப்பு வலையமைப்பாக உருவாக்குதல் இதற்கு தீர்க்கமான காரணியாக அமைந்தது.

மேலும், மாவட்ட மட்டத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்த இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் உத்தியோகத்தர்களினது நேரடி வலையமைப்பை அடி மட்டம்வரை விஸ்தரிக்கப்பட்டு இலங்கையிலுள்ள 335 பிரதேச செயலகங்களிலும் விரிவுபடுத்துவதற்காக, இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் உத்தியோகத்தர் ஒருவரை இணைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

சமூகப் பாதுகாப்புத் பிரேரணைத் திட்டங்கள் தொடர்பாக இலங்கை பிரசைகளை விழிப்புணர்வூட்டுவதற்காக பின்பற்றிய கூட்டப்பட்ட குழுக்களை விழிப்புணர்-வூட்டும் சம்பிரதாய முறைக்கு அப்பாற்சென்று, புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்து விரைவாக மொத்த நாட்டையும் ஆட்கோண்டு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் தற்போதைய தவிசாளரின் உள்ளார்ந்த ஆற்றலுடன் சமூக ஊடகங்கள், வானொலி, ரூபவாகினி, பத்திரி-க்கைகள் போன்ற ஊடகங்களின்மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு இயன்றமை காரணமாக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிகளை மக்களிடத்தில் கொண்டுச் செல்வதற்கு எமக்கு இயன்றது.

அரச ஓய்வூதியம் அல்லது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து தமது வயோதிப காலத்தை பாதுகாப்பாக கழிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கப்பெறாத ஆயிரம்கணக்கான இலங்கை வாழ் மக்கள், சமூகப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய நலன் திட்டத்திலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக, இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை பாரிய பொறுப்பை வகிக்கவேண்டியுள்ளது. தமது

கடமைப்பொறுப்புகளுக்கு அப்பாற்பட்ட சமூகப் பொறுப்பாக கவணத்தில் கொண்டு அனைத்து உத்தயோகத்தர்களும் பணியாற்ற வேண்டி உள்ளது. அதற்காக 2021 ஆம் ஆண்டிலும் எதிர்வருங் காலங்களிலும் இந்த மகத்தான பணிக்கு எனது பதவியணி அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள் என்பதை குறிப்பிடுவதுடன், 2021 ஆம் ஆண்டின் வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

இவ்வெற்றிகளின் பொருட்டு உரிய வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்கிய எமது இராஜாங்க அமைச்சின் கௌரவ செயலாளர் நீல் பண்டார ஹப்புஹின்ன அவர்களுக்கும், மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட உத்தயோகத்-தர்களுக்கும், எமது சபையின் கடமைப்பொறுப்புகளை எய்துக்கொள்வதற்கு தலைமைத்துவம் வழங்கிய கௌரவ இராஜாங்க அமைச்சர் ஷேஹான் சேமசிங்க அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கே.ஏ.எஸ்.பீ.களுஆரச்சி
பொதுமுகாமையாளர்
2022.02.18

முன்னாள் தவிசாளர்கள்

பெயர்	கால வரையறை		
திருமதி. வி. ஜெகராசசிங்கம்	1997.01.01	-	1999.11.01
திரு. எஸ். காரியவசம்	1999.11.08	-	2000.11.01
திரு. கே. ஜயலத்	2000.11.24	-	2002.02.06
திரு. ஆர்.எம்.டி.பீ. போகஹகும்புர	2002.02.07	-	2004.01.25
திரு. ஆனந்த கால்லேஆரச்சி	2004.02.03	-	2004.06.01
திரு. டீ. கே.ஆர். வீரசேகர	2004.06.15	-	2005.12.15
திரு. லக்ஸ்மன் ஹிரிமுத்துகொட	2005.12.27	-	2006.09.18
திரு. சுனில் சமரவீர (பதில் கடமையாற்றும்)	2006.09.19	-	2006.10.11
திரு. சரத் கீர்த்திரத்ன	2006.10.12	-	2010.05.05
திரு. நிமல் சந்ர அமரசிங்க	2010.05.17	-	2011.12.31
சட்டத்தரணி திருமதி. சுமணா ஆரியதாச	2012.01.03	-	2015.01.21
திரு. சுமதிபால காரியவசம்	2015.02.10	-	2015.12.07
திரு. கீர்த்தி சுரஞ்ஜித் மாவெல்லகே	2015.12.09	-	2018.05.15
திரு. ஜெ.ஏ.எஸ். ஜயகொடி	2018.05.18	-	2018.10.26
திரு தேவக்க வீரசிங்க	2019. 02.11	-	2019.12.06

முன்னாள் பொதுமுகாமையாளர்கள்

பெயர்	காலவரையறை		
திரு. ரணதுங்க ஹெமச்சந்திர	1996.09.25	-	1998.08.31
திரு. அசோக்க பீரிஸ்	1998.09.01	-	2000.02.01
திரு. பீ.ஏ. சோமபால	2000.02.02	-	2002.08.16
திரு. கே.ஜி.ஜி. விஜேவர்தன	2002.09.16	-	2003.12.31
திரு.பி.ஈ.சி. நேசையா	2004.01.01	-	2007.10.12
திரு.ஜெ.எம். விஜயரத்ன	2008.01.01	-	2009.07.23
திருமதி. என்.ஜே. பத்திரண	2009.07.24	-	2010.07.23
திரு.கே.என்.ஜே. குரே	2010.07.27	-	2012.01.26
திரு. தம்மிக்க பாதுக்க	2014.03.17	-	2017.11.09
திரு.கே.ஏ. திலகரத்ன	2018.01.16	-	2018.07.15
திரு. பீ.ரீ.கே. நிஷ்ஷங்க	2019.12.02	-	2020.06.20
திரு. நிமல் கொடவலகெதர	2020.06.22	-	2020.12.22

பணிப்பாளர் சபை — 2020 / 2021 ஆம் ஆண்டு

பெயர்		பதவி
சிரேஸ்ட விரிவுரையாளர் சமன் ஹந்தராகம	-	தவிசாளர்
திரு. டி.எம். சுனில் சாந்த வீரசேகர	-	நிறைவேற்றுப் பணிப்பாளர்
சட்டத்தரணி திரு. எச்.ஆர். பரஷக்தி சேனாநாயக்க	-	பணிப்பாளர்
கலாநிதி திரு. தம்மிக்க திசானாயக்க	-	பணிப்பாளர்
சட்டத்தரணி திரு. ஜானக்க ரத்னாயக்க	-	பணிப்பாளர்
திரு. அருண குமாரவடு	-	பணிப்பாளர்
திரு. கே.எம். குமாரசிறி	-	பணிப்பாளர்

பணிப்பாளர் சபை — 2020 / 2021 ஆம் ஆண்டு



சிரேஸ்ட விரிவுரையாளர் சமன் ஹந்தராகம
B.A. (Special) Sociology (Hons) (CMB), MA in Sociology (CMB), CTHE (CMB).
தவிசாளர்



திரு. டி.எம். சுனில் சாந்த வீரசேகர
நிறைவேற்றுப் பணிப்பாளர்



திரு. கே.எம். குமாரசிறி
பணிப்பாளர்
Deputy Director ,Department of Fiscal policy, Ministry of Finance (Ex- Officio member – Treasury Representative)
பணிப்பாளர்



சட்டத்தரணி திரு. ஜானக்க ரத்னாயக்க
பணிப்பாளர்



சட்டத்தரணி திரு. எச்.ஆர். பரஷக்தி சேனாநாயக்க
பணிப்பாளர்




கலாநிதி திரு. தம்மிக்க திசானாயக்க
Lecturer, UVPA
பணிப்பாளர்



திரு. அருண குமாரவடு
Engineer
பணிப்பாளர்

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் நிறுவனஞநசார் கட்டமைப்பு



இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் கடமைப் பொறுப்பு

அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன்களை வழங்குதல் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் கடமைப் பொறுப்பாகும்.

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் பிரகாரம், 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதிய 1464/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக பிரகடனஞ் செய்யப்பட்ட 06 பிரேரணைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

பொருளாதார ரீதியில் விளைத்திறனான பிரேரணைத் திட்டங்களைச் செயற்படுத்துதல், அங்கத்தவர்களுக்கு உயர் மற்றும் பாதுகாப்பான ஓய்வூதியக் காப்பீட்டினை வழங்குதல் என்பன நோக்கமாகக் கொண்டு தற்போது "சுரக்கும" பிரேரணைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

"சுரக்கும" பிரேரணைத் திட்டத்திற்கு 18 தொடக்கம் 59 வயது வரை, அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்கள் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதுடன், தவணைக் கட்டணத்தினைச் செலுத்தும் ஆற்றலுக்கமைவாக அங்கத்தவர், தேவையானளவு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2012 ஒக்டோபர் 11 ஆம் திகதி நினைவுகூரப்பட்ட "பெண் குழந்தையின் சர்வதேச தினம் முன்னிட்டு" அதற்கு இணையாக "ஆரஸ்ஸாவ" முன் திட்ட சமூகப் பாதுகாப்புப் நலன் பிரேரணைத் திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டது. அப்பிரேரணைத் திட்டம் தொடர்பில் 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள், தமது பெற்றோர்/பாதுகாவலர் பொறுப்பின் கீழ் அங்கத்துவத்தினைச் செய்ய முடியும் என்பதுடன், 18 வயது பூர்த்தியானதன் பின்னர் அவர்களை "சுரக்கும" ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு கணக்கில் காணப்படும் மீதியின் பிரகாரம் ஓய்வூதிய உரித்து வழங்கப்படும்.

பிரேரணைத் திட்டத்தின் நலன்கள்

- 60 வயதிலிருந்து உயிர்வாழும் காலம் வரை அங்கத்தவருக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்குதல்.
- அங்கத்தவர் ஓய்வூதியராக மரணிக்கும் வேளையில் அங்கத்தவரின் 80 வயது வரை வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியக் கொடுப்பனவினை வழங்குதல்.
- நிரந்தர பகுதியளவிலான அங்கவீனத்தின்போது வயதின் பிரகாரம் சீர்செய்யப்பட்ட ரூபா. 25,000/- வரை பணிக்கொடைக் கொடுப்பனவு மற்றும் குறிப்பிட்ட தவணைக் கொடுப்பனவின் பிரகாரம் 60 வயதிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல்.

- நிரந்தர முழுமையான அங்கவீனத்தின்போது வயதின் பிரகாரம் சீர்செய்யப்பட்ட ரூபா. 50,000/- வரை பணிக்கொடை மற்றும் தேறிய பங்களிப்பு நிதி அல்லது அங்கவீனம் ஏற்பட்ட தினத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படும் மாதாந்த ஓய்வூதியம் வழங்குதல்.
- ஓய்வூதியம் கிடைப்பதற்கு முன்னர் அங்கத்தவர் மரணிப்பின், தங்கியிருப்போர்களுக்கு ஒரு தடைவை வழங்கப்படும் பணிக்கொடையினை வழங்குதல்.

பிரேரணைத் திட்டத்தின் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களினூடாக மேற்கொள்ளலாம்.

தவணைப் பணக் கொடுப்பனவினை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் அதிகாரம் ஒப்படைக்கப்படும் கிராம உத்தியோகத்தர்களினூடாகவும் மற்றும் இச்சபையின் அலுவலகங்களினூடாகவும் செலுத்த முடியும்.

1. நிர்வாகப் பிரிவு

1.1. நிறுவுதல், அலுவலகங்களை தாபித்தல் மற்றும் மாற்றங்கள்

1996 ஆம் ஆண்டில் சுவசிறிபாயவில் தாபிக்கப்பட்ட சுகாதார, பெருந்தெருக்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சில் 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் 1996 ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி பிரதான பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டதன் பின்னர் சமூகப் பாதுகாப்புச் சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பின்னர் பொரள்ளையில் அமையப்பெற்ற சமூக சேவைகள் திணைக்களத்தின் அலுவலகக் கட்டிடத்தில், சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை தாபிக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலக்கம் 585, காலி வீதி, கொழும்பு 06 என்ற இடத்தில் அமையப்பெற்ற கட்டிடத்தில் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் வாடகைக்கு எடுக்கப்பட்டு சபை அலுவலகம் அதில் அமைந்தமை இரண்டாவது கட்டத்தின் கீழ் இடம்பெற்றது. பின்னர், 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தம்) சட்டத்தினூடாக மூலச் சட்டம் திருத்தஞ் செய்யப்பட்டது. அதன்பின்னர் 2003.07.01 ஆம் திகதியிலிருந்து இலக்கம் 150 ஏ, நாவல வீதி, நுகேகொடை என்ற முகவரியில் அலுவலகம் நிறுவப்பட்டது.

2010.04.30 ஆம் திகதியிலிருந்து இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின்கீழ் இயங்கி வருவதுடன், 2010.12.01 ஆம் திகதியிலிருந்து இலக்கம் 125, நாவல வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 05 என்ற இடத்தில் தலைமை அலுவலகம் நிறுவப்பட்டது.

2013.03.06 ஆம் திகதி, தலைமை அலுவலகம், இலக்கம் 18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய என்ற முகவரியில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், அது "சமாஜ ஆரக்ஸண பியச" எனப் பெயரிடப்பட்டது. இதனூடாக மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான மற்றும் விளைத்திறனானதுமான சேவைகளை வழங்குவதற்கு இயலுமை கிடைக்கப் பெற்றுள்ளது. தற்போதளவில் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு சகல மாவட்டச் செயலகங்களிலும் மாவட்ட அலுவலகங்கள் தாபிக்கப்பட்டு பணிகளை முன்னெடுப்பதற்கு விரிவுபடுத்தப்-பட்டுள்ளன.

1.2. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடங்கள்.

1999 ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது ஊழியர் இடமாற்றம், விலகிச் செல்லுதல் போன்ற காரணங்களால் வெற்றிடங்கள் தொடர்ந்து காணப்பட்டதுடன், தற்போது கடமையிலுள்ள நிரந்தர பதவியணி 179 பேராவர். அப்பதவியணி பிரிக்கப்பட்டுள்ள முறை பின்வருமாறு ஆகும். பதவியணி போதாமையால் நிறுவனத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்த்தவாறு எட்டமுடியாதபடியால், செயற்பாடுகளை மிகவும் விரிவுபடுத்துவதற்கு 198 பேர்களைக்கொண்ட பதவியணிக்கு பொது திறைசேரியால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் உரிய ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு சம்பளங்கள் மற்று ஆளணிகள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டதுடன், 2012.09.14 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2021.12.31 ஆம் திகதி நிறுவனத்தில் 33 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், நிதி அமைச்சினால் 2021.08.28 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட MF/NB/07/CM/2021/163 ஆம் இலக்க "அரசாங்க செலவினங்களின் மீளாய்வு" என்ற தலைப்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2021.09.06 ஆம் திகதிய சமுர்த்தி, மனை பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மூலம் "அரசாங்க செலவினங்களை மீளாய்வு" என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டுள்ள SMS/ACC/11/Butget/2022 ஆம் இலக்க கடிதம் என்பவற்றால் பணியாளர்கள் ஆட்சேர்ப்பதை ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், இவ்வெற்றிடப் பதவிகளின் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இயலாதுள்ளது.

பதவியணி பகுப்பாய்வு - 2021 ஆம் ஆண்டு

(2021.12.31 ஆம் திகதியன்று)

தொடர் இல.	பதவிகளின் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட	தற்போதுள்ள	வெற்றிடங்கள்
1	பொதுமுகாமையாளர்	1	1	0
2	பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி)	1	1	0
3	பிரதிப் பொதுமுகாமையாளர் (சமூகப் பாதுகாப்பு)	1	1	0
4	உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)	1	1	0
5	உதவிப் பொதுமுகாமையாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம்)	1	1	0
6	உதவிப் பொதுமுகாமையாளர் (நிர்வாகம்)	1	1	0
7	உதவிப் பொதுமுகாமையாளர் (ஓய்வூதியம்/காப்புறுதி)	1	1	0
8	உள்ளகக் கணக்காய்வாளர்	1	1	0
9	முகாமையாளர் (நிர்வாகம்)	1	1	0
10	முகாமையாளர் (சான்றிதழ் சேவைகள்)	1	1	0
11	முகாமையாளர் (காப்புறுதி)	1	1	0
12	கணக்கீட்டு உத்தியோகத்தர் (நிதி)	1	1	0
13	சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (மேம்பாடு)	1	1	0
14	சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஓய்வூதியம்)	1	1	0
15	சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்)	1	1	0
16	கணக்கு உத்தியோகத்தர்(சேகரிப்பு)	1	1	0
17	சிரேஷ்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	6	6	0
18	கணக்காய்வு உத்தியோகத்தர்கள்	2	2	0
19	ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்	49	42	7
20	புலனாய்வு உத்தியோகத்தர்கள்	2	2	0
21	தரவுக் கட்டுப்பாட்டாளர்	1	1	0
22	கணனி வலையமைப்பு உதவியாளர்	1	0	1
23	கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்(மென்பொருள்)	1	1	0
24	கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (வன்பொருள்)	1	1	0
25	புத்தகப் பதிவாளர்	2	1	1
26	முகாமைத்துவ உதவியாளர்	74	58	16
27	சாரதி	9	6	3
28	அலுவலகப் பணியாளர்	34	30	4
மொத்தம்		198	**166**	**32**

1.3. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை அதிகரித்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.

சபையின் இலக்கிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு தேவையான பதவியணியினை அமைத்து பயிற்சி மற்றும் அபிவிருத்தியினூடாக அவர்களின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பதவியணியினை மீளமைப்பதனூடாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியான 198 ஐ 561 வரை அதிகரிப்புச் செய்வதற்கு தாபனத்துடனான மீள்கட்டமைப்பு திட்டம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நிதி அமைச்சினால் 2021.08.28 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட MF/NB/07/CM/2021/163 ஆம் இலக்க "அரசாங்க செலவினங்களின் மீளாய்வு" என்ற அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2021.09.06 ஆம் திகதிய சமுர்த்தி, மனை பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மூலம் "அரசாங்க செலவினங்களின் மீளாய்வு" என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டுள்ள SMS/ACC/11/Butget/2022 ஆம் இலக்க கடிதம்மூலம் பணியாளர்கள் ஆட்சேர்ப்பதை ஒத்திவைக்குமாறு ஆலோனைகள் வழங்கியுள்ளதால், வெற்றிடமாகவுள்ள பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புகளை நிறுத்தி-வைக்கப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியமான பதவிகளுக்கு அனுமதி பெற்றுக்கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, வெற்றிடமாகிய பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புகளை எதிர்காலத்தில் மேற்கொண்டு அதிகூடிய சேவை விளைத்திறனை அடைந்துக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

1.4. 2021 ஆம் ஆண்டில் விலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல்

	பெயர்		பதவி		
01.	திருமதி.ஜே.ஏ.ஜயந்தி பொரேரா	-	அலுவலகப் பணியாளர்	-	ஓய்வுபெறுதல்
02.	திரு.ஏ.எஸ்.எம்.இர்சாத்	-	ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	-	விலகுதல்
03.	திருமதி இரேஷா பிரமிளா மதுஷானி	-	முகாமைத்துவ உதவியாளர்	-	விலகுதல்
04.	திருமதி. ஜீ.பீ. பரணமான	-	ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	-	விலகுதல்
05.	திரு.கே.பீ.ஆர்.சீ.களுபஹன	-	சாரதி	-	பதவு துறத்தல்
06.	திரு.ஈ.ஜீ.டீ.சுரவீர	-	ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	-	விலகுதல்
07.	திரு. விஷ்வ மதுஜித் பெரமுண	-	ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	-	விலகுதல்
08.	திருமதி சசீதா கல்பனீ	-	முகாமைத்துவ உதவியாளர்	-	விலகுதல்
09.	திரு.கே.கே. சமந்த லக்சிறி	-	சாரதி	-	விலகுதல்

1.5. நிர்வாகப் பிரிவின் தற்போதைய பதவியணி (2021.12.31 ஆம் திகதியில்)

பதவி	**உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை**
பொது முகாமையாளர்	1
உதவி பொதுமுகாமையாளர் (நிர்வாகம்)	1
முகாமையாளர் (நிர்வாகம்)	1
முகாமைத்துவ உதவியாளர்	7
தவிசாளரின் செயலாளர் (முகாமைத்துவ உதவியாளர்)	1
அலுவலகப் பணியாளர்	1
(தவிசாளர் அவர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட) அலுவலகப் பணியாளர்	1
அஞ்சல் செயற்பாடுகள் (அலுவலகப் பணியாளர்)	1
தொலைபேசி இயக்குனர் (அலுவலகப் பணியாளர்)	1
சாரதிகள்	6
பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்	1
மொத்தம்	22

1.6. நிர்வாகப் பிரிவின் பிரவின் பிரதான செயற்பாடுகள்

சபையின் நோக்கு மற்றும் செய்றபணி என்பவற்றை எய்துக்கொள்கையில் தாபனத்துடனான நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்பு வலுவாகவும் பனுள்ளதாகவும் பராமரித்தல் நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்திக்கான திட்டமிடல், தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையால் வழங்கப்படும் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல், அரசாங்கத்தால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் பணியாற்றுதல் மற்றும் ஏனைய சேவைப் பிரிவுகளின் நடவடிக்கைகளை மிக வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்பு என்பன மேற்கொள்கையில் நிர்வாகப் பிரிவால் பின்வரும் அடிப்படை கடமைப்பொறுப்புகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் பிரகாரம், பதவியணியினை ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்றுவித்தல், வினைத் திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்தல், சம்பளவேற்றங்களை வழங்குதல், சம்பள அதிகரிப்பின் மாற்றயமைப்புகளை மேற்கொள்ளுதல் மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் தரமுயர்வுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணியின் சுயவிபரக்கோப்புகளை பராமரித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
3. தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பொருட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல்.

4. நிறுவனத்தின் போக்குவரத்து நடவடிக்கைகள், வாகன பராமரிப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு சேவைகள், துப்பரவேற்பாட்டு சேவைகள் பெற்றுக்கொள்கையில் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5. வருடாந்த அறிக்கைகள்/ இணைந்த திட்டம்/ செயற்றிட்டம் மற்றும் ஏனைய மாதாந்த, கலாலாண்டு அனைத்து அறிக்கைகளையும் தயாரித்து பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் அமைச்சிடம் அனுப்பிவைத்தல்.
6. நாடு பூராகவும் பிரதேச செயலக மட்டத்தில் விரிவாக்கப்பட்டுள்ள இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் நடவடிக்கைகளை முறைசார்படுத்திக் கொள்ளுதல் அத்தியாவசியமான பணியாகும். ஆகையால் 58000 ம் பயிலுநர் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்கின்ற அரசாங்கத்தின் நிகழ்ச்சித்-திட்டத்தின்கீழ், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 360 பட்டதாரிகளை எமது நிறுவனத்திடம் இணைப்புச் செய்துகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
7. பலநோக்கு அபிவிருத்தி செய்யலணி திணைக்களம் மூலம் பலநோக்கு அபிவிருத்தி உதவி பயிலுநர்களை எமது நிறுவனத்திடம் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
8. ஆண்டு இறுதி செயலாற்றுகை அறிக்கை தயாரித்து அமைச்சிடம் அனுப்பிவைத்தல்.
9. தொழில்நுட்ப ஆலோசனை குழுவிற்கு தேவையான பத்திரங்களை தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் கூட்டங்களை நடாத்தும் பணிகளை ஒழுங்கமைத்தல்.
10. கணினி பிரிவால்,
11. இலங்கை முழுவதும் வியாபித்துள்ள 25 மாவட்ட அலுவலகங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான கணினி வலையமைப்பு வசதிகளை வழங்குதல்
12. மாதாந்தம் பணிப்பாளர் சபை கூட்டங்களை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பணிப்பாளர் சபையால் வழங்கிய கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
13. பதவியணியின் நாளாந்த வருகை அறிக்கைகளை கோப்பிட்டு பராமரித்து , தலைமை அலுவலகத்தினதும் 25 மாவட்ட அலுவலகங்களினதும் லீவு தொடர்பான அறிக்கைகளை 06 மாதங்களுக்கொருமுறை அனைத்து பதவியணியினரிடமும் வழங்குதல் மற்றும் மாதாந்த அறிக்கைகளை கோப்பிடல்.
14. பதவியணியினால் அக்ரஹாரா காப்புறுதி நிதியத்தில் உறுப்பினர் உரிமை பெற்றுக்கொண்டுள்ளவர்களது, காப்புறுதி தவணைப் பணத் தொகையினை மாதாந்தம் காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடம் அனுப்பிவைத்தல் மற்றும் காப்புறுதி காப்பீட்டு கோரிக்கைகளுக்கு பணம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

15. நாளாந்தம் நிறுவனத்திடம் கிடைக்கப்பெறுகின்ற கடித ஆவணங்களை பரிசோதனைச் செய்த பின்னர் தவிசாளர், பொதுமுகாமையாளர், சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்கள் ஆகியோரிடம் உடனடியாக சமர்ப்பித்தல் மற்றும் மாவட்ட அலுவலகங்கள், ஏனைய அரச மற்றும் அரச சாராத நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடிதங்கள், பொதிகள் உடனடியாக அஞ்சலிடல்.
16. பதவியணியின் இடமாற்ற சபைகளை நடாத்தப்பட்டு, அதன்படி இட-மாற்றங்களுக்கு தேவையான கடிதங்களை வழங்குதல் மற்றும் நிறுவனத்தின் கடமைத் தேவைகளின்மீது மேற்கொள்கின்ற இடமாற்றங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
17. மாதாந்த, காலாண்டு அறிக்கைகள், உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் அரசாங்கத்தின் ஐயவினாக்களுக்கான பதில்கள் அனுப்பிவைத்தல் அத்துடன், கணக்காய்வுக் கூட்டங்களில் பங்குகொள்ளுதல்.
18. தொழில்நுட்பகுழு கூட்டங்களின் பொருட்டு பங்குகொள்ளுதல், தேவையான தொழில்நுட்பகுழு பத்திரங்களை தயாரித்தல் மற்றும் கூட்டங்களை நடாத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
19. அத்தியாவசியமான நிறுவனஞ்சார் நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான அமைச்சரவை பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் தேவையான அனுமதி பெற்றுக்கொள்ளுதல்.
20. நிறுவனஞ்சார் மீள்கட்டமைப்புக்கு தேவையான பிரேரணைகளை சமர்ப்பித்து தேவையான அனுமதி பெற்றுக்கொள்ளுதல்.
21. பதவியணியினரின் பொருட்டு பயிற்சி பட்டறைகளை நடாத்தல்.

1.7. பௌதிக வளங்கள்

பிரதான அலுவலகம் - 2013 மார்ச் மாதம் 06 ஆம் திகதி, இல.18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய என்ற இடத்தில் அமையப் பெற்ற 04 மாடியினைக் கொண்ட சபைக்கு உரித்தான கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலகங்கள் - நாடுபூராவுமுள்ள சகல மாவட்டங்களின் மாவட்ட செயலக அலுவலகங்களில் சமூகப் பாதுகாப்பு மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1.8. தொடர்பாடல் வசதிகள்

நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி முறைமையை மேம்படுத்தி, ஒவ்வொரு பிரிவும் உள்ளடங்கும் வகையில் புதிய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் 03 பொது தொலைபேசி இணைப்புக்களை தொலைநகல் வசதிகளுடன் தாபிக்கப்பட்டுளது. அதற்கு மேலாக பின்வருமாறு நேரடித் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தவிசாளர்	-	நேரடி தொலைபேசி மற்றும் ஒரு பெக்ஸ் இணைப்பு
நிறைவேற்றுப் பணிப்பாளர்	-	நேரடி தொலைபேசி மற்றும் ஒரு பெக்ஸ் இணைப்பு
பொதுமுகாமையாளர்	-	நேரடி தொலைபேசி மற்றும் ஒரு பெக்ஸ் இணைப்பு
பிரதி பொதுமுகாமையாளர் 02	-	நேரடி தொலைபேசி மற்றும் இரண்டு பெக்ஸ் இணைப்பு
உதவி பொதுமுகாமையாளர் 03	-	மூன்று தொலைபேசி இணைப்புகள்
உள்ளகக் கணக்காய்வாளர்	-	ஒரு தொலைபேசி இணைப்பு
அஞ்சல் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதற்கு	-	இரண்டு தொலைபேசி இணைப்புகள்
உடனடி அழைப்பு	-	ஒரு தொலைபேசி இணைப்பு

மேற்குறிப்பிட்ட தொலைபேசி இணைப்புக்களுக்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் தொலைபேசி தொடர்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தில் கணனி வலையமைப்பு முறைமை தாபிக்கப்பட்டுள்ளதுடன், VPN முறைமை ஊடாக மாவட்டச் செயலகங்களை வலையமைப்புச் செய்யப்பட்டு சேவை நடவடிக்கைகளை மிகவும் விளைத்திறனாக்குவற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

1.9. போக்குவரத்து வசதிகள்

2021.12.31 ஆம் திகதியில் 02 கெப் வாகனம், 02 கார்கள், 02 வேன்கள், 01 முச்சக்கர வண்டி மற்றும் 15 மோட்டார் சைக்கிள்கள் என்ற வகையில் 21 வாகனங்கள் சபைக்கு உரியதாக இருந்தன. இவற்றுக்கிடையில் ஒரு மோட்டார் சைக்கிள் பாவனைக்குதவாத நிலையில் உள்ளதால் தற்போது 14 மோட்டார் சைக்கிள்கள் மட்டும் எமது நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகிறது.

குறித்த வாகனங்களில் 02கெப் வாகனங்கள், 1997 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் கொள்வனவு செய்திருந்ததுடன், கார் 2008 ஆம் ஆண்டிலும், நிசான் யூக் கார் 2013 ஆம் ஆண்டிலும், பஜாஜ் வகையின் முச்சக்கர வண்டி 2013 ஆம் ஆண்டிலும், டொயொடா ஹய்எஸ் வேன் 2014 ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று பஜாஜ் வகையின் 09 மோட்டார் சைக்கிள்கள் 2011 ஆம் ஆண்டிலும், ஏனைய 05 மோட்டார் சைக்கிள்கள் 2014 ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் தொழில்பாட்டு குத்தகை முறையின்கீழ் ஐந்து ஆண்டுகளுக்காக இரண்டு கார்கள், ஒரு டபிள் கெப் வாகனம் மற்றும் ஜிப் வண்டி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஒழுங்குமுறையில் 2022.06.30, 2022.11.22 ஆம் திகதிகளில் ஏற்புடைய உடன்படிக்கை முடிவுறுவதற்குள்ளது.

1.10. தற்போதுள்ள வாகனங்களின் விவரங்கள் (2021.12.31 ஆம் திகதியன்று)

வாகன இல.	வகை	முதலில் பதிவு செய்யப்பட்ட தினம்	மிகவும் நன்று	நன்று	பழுதுபார்க்கப்பட்டு பாவிக்கும் நிலையிலுள்ளது	பாவனைக்கு தவாத	அகற்றுதல்
250 – 6095	கெப் வாகனம்	1997.10.24			√		
252 – 5463	டபிள் கெப் வாகனம்	1998.08.14			√		
KH- 4506	கார்	2008.09.30		√			
KX- 0914	நிசான் யூக் கார்	2013.10.17		√			
NB – 8428	ரொயட்டா ஹய்எஸ் வான்	2014.08.18	√				
SP CAU-7691	TOTOTA – AXIO G வகையான கார்	2017.06.29	√				
SP CAU-7694	TOTOTA – AXIO	2017.06.29	√				
SP PH-9137	டபிள் கப் FORD RANGER வகை	2017.06.29	√				
WPCAH- 4984	ஜீப் வண்டி TOYOTA-FORTUNER வகை	2017.11.21	√				
WP AAG -9346	பஜாஜ் வகையான முச்சக்கர வண்டி	2013.04.18		√			
WP WK-3810	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3806	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3789	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3880	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3815	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06			√		

வாகன இல.	வகை	முதலில் பதிவு செய்யப்பட்ட தினம்	மிகவும் நன்று	நன்று	பழுதுபார்க்கப்பட்டு பாவிக்கும் நிலையிலுள்ளது	பாவனைக்கு தவாத	அகற்றுதல்
WP WK-3795	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3801	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3882	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WK-3787	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2011.04.06		√			
WP WD-5580	கினெடிக் வகையான மோட்டார் சைக்கிள்	2010.12.31				√	
WP BAR-3240	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2014.01.27		√			
WP BAR-3263	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2014.01.27		√			
WP BAR-3250	பஜாஜ் வகையான மோட்டார் சைக்கிள்	2014.01.27		√			
WP BAU-0765	ஸ்கூட்டி வகையான மோட்டார் சைக்கிள்	2014.03.19		√			
WP BAU-0769	ஸ்கூட்டி வகையான மோட்டார் சைக்கிள்	2014.03.19		√			

1.11. விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்

1. சமூகப் பாதுகாப்பினை கிராம மட்டங்களில் விரிவுபடுத்தும்போது, வெளிக்களப் பதவியணி போதுமானதன்று என பதவியணி மீளமைப்பினை ஆராய்ந்ததன் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நாடுபூராகவுமுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மட்டத்தில் இலங்கை சமூகப் பாதுகாப்சை சபையின் நடவடிக்கைகளை முறைசார்படுத்துவதற்காக 58000 ம் பயிலுநர் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் அரசாங்க வேலைத் திட்டத்தின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்துள்ள 360 பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்காக அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் எழுத்திலான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பௌதிக வளப் பற்றாக்குறை

1. தற்போதுள்ள வாகன ஒதுக்கத்தினுள் பழைய வாகனங்கள் அதிகமானதன் காரணமாக பழுதுபார்ப்பதற்கு அதிக செலவினை ஈடுசெய்ய வேண்டியுள்ளதால் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
2. மாவட்ட அலுவலகங்களுக்கு சேவை நடவடிக்கைகளை பன்முகப்படுத்து-வதற்காக பௌதிக மற்றும் மனித வளத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்.
3. தலைமை அலுவலகக் கட்டிடத்தில் தற்போது பதவியணியினறுக்கு கூட்டங்களை நடாத்துவதற்கு வசதிகளின்மையினால், கேட்போர் கூடமொன்றினை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.
4. இச்சபையின் பணிகளின் பொருட்டு மாவட்ட அலுவலகங்களை தாபிக்கப்பட்டுள்ளதுடன், தொழில்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கையில், உத்தியோகத்தர்களின் கடமைப்பொருட்டான போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதியளவிலான வாகனங்கள் இல்லாத படியால் அதற்கான வசதிகளை ஏற்படுத்தல் .

1.12. தகவல் தொழில்நுட்ப அலகு

பிரதான செயற்பாடுகள்

1. புதிய ஓய்வூதிய தகவல் முகாமைத்துவ மென்பொருள் முறைமை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
2. நிறுவனத்தில் புதிய மாற்றங்களினை முன்னெடுத்தல் மற்றும் ஏனைய பணிகள் தொடர்பில் உயர் முகாமைத்துவத்திற்குத் தேவையான அறிக்கைகளை வழங்குதல்.
3. கணனி வலையமைப்பினை இற்றைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுவற்குத் தேவையான நடவடிக்கைளை முன்னெடுத்தல்.
4. பிரதான அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள கணனி நிகழ்ச்சித் திட்டங்களை செயலிழிப்பு இல்லாமல் முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
5. தற்போதுள்ள மென்பொருள் திட்டத்தின் தரவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

1.13. 2021 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப அலகினால் மேற்கொண்ட செயற்பாடுகள்

1. உத்தேச மென்பொருள் முறைமை தொடர்பில் புதிய விரிவான மென்பொருள் விவரக் குறிப்பறிக்கையைக் கையொப்பமிடுதல்.
2. உத்தேச மென்பொருள் முறைமைக்காக புதிய மாற்றங்கள் மற்றும் விவரக்குறிப்பறிக்கையைச் சமர்ப்பித்தல்.
3. Google sheet பயன்படுத்தி சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய திட்டத்திற்கு நாளாந்த ஆட்சேர்ப்புத் தொடர்பான அறிக்கைகளை வழங்குதல்
4. Zoom தொழில்நுட்பம் பயன்படுத்தி தொற்றுநோய் காலத்தில் நடாத்தப்பட வேண்டிய கூட்டங்களை வழிநடாத்தல் மற்றும் தொழில்நுட்ப பங்களிப்பினை வழங்கி நிறுவனஞ்சார் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
5. மாவட்ட அலுவலகங்களுக்கான கணினி, துணைக்கருவிகளை வழங்குதல் மற்றும் பழுதுபார்ப்பினை முன்னெடுத்தல்.
6. தொற்றுநோய் நிலைமை மத்தியிலும் தாமதிக்காது ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் அன்றாடக் கடமைச் செயற்பாடுகளுக்கு தொழில்நுட்பப் பங்களிப்பினை வழங்குதல்.

1.14. தகவல் தொழில்நுட்ப அலகின் பதவியணி

பதவி		உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்)	-	1
தரவுக் கட்டுப்பாட்டாளர்	-	1
கணினி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (மென்பொருள்)	-	1
கணினி நிகழச்சித் திட்ட உதவியாளர் (வன்பொருள்)	-	1
மொத்தம்	-	**4**

2. சமூகப் பாதுகாப்புப் பிரிவு

2.1. பிரதான செயற்பாடுகள்

1. ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன்கள் பிரேரணைத் திட்டம் தொடர்பில் விளம்பரம் செய்தல், மேம்பாட்டுச் செயற்பாடுகளைத் திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்.
2. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை அமுற்படுத்துதல் தொடர்பில், குறித்த பிரேரணைத் திட்டத்தினை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
3. பிரேரணைத் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டியதன் பின்னர் அங்கத்துவத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
4. பின் தவணைப்பணக் கொடுப்பனவு தொடர்பில் உரிய வழிகாட்டலை முன்னெடுத்து, கொடுப்பனவு செய்வதற்கான பாஸ் புத்தகம், வங்கி பற்றுச் சிட்டையினை வழங்குதல்.
5. அங்கத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல், செயற்படாத நிலைமையிலுள்ள அங்கத்தவர்களை செயலூக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
6. தலைமை அலுவலகத்தின் சமூகப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களை நிர்வகிப்பதன் மூலம் சேவை நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
7. நிறுவனங்கள், உத்தியோக்தர்கள் மற்றும் பொதுசன அமைப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்து ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை அமுற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2.2. நலன் செலுத்தல்

1. அங்கத்தவர் 60 வயது பூர்த்தியான திகதியிலிருந்து உயிர்வாழும் காலம் வரை தொடர்ச்சியாக மாதாந்தம் ஓய்வூதியம் வழங்குதல்.

2. அங்கத்தவர் 60 வயதினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் நிகழும் அங்கத்தவரின் மரணம் தொடர்பில் சார்ந்துள்ளவர்களுக்கு நலன் வழங்குதல், பகுதியளவிலான இயலாமை, முழுமையான இயலாமை நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. "ஆரஸ்ஸாவ" முன்திட்டமிட்ட ஓய்வூதியப் திட்டத்தின்கீழ் மேலதிக நலன்களை வழங்குதல்.

2.3. சேவை அலகுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

சான்றுறுதிச் சேவைகள், ஓய்வூதியங்கள், காப்புறுதி மற்றும் மேம்பாடு என்ற வகையில் தலைமை அலுவலகத்தின் 04 சேவை அலகுகள் மற்றும் சகல மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள 25 அலுவலகங்களினூடக சேவை நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன.

2.4. பிரேரணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் தொடர்புபடும் உத்தியோகத்தர்கள்.

மாவட்டச் செயலகங்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி பதவியணி நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் மாவட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் நேரடி ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பிரேரணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் குறித்த உத்தியோகத்தர்களின் தலையீட்டினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.5. சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரதான அலுவலகத்தின் பதவியணி

பதவி		பதவிகளின் எண்ணிக்கை
பிரதிப் பொதுமுகாமையாளர் (சமூகப் பாதுகாப்பு)	-	01
உதவிப் பொதுமுகாமையாளர் (ஆடசேர்ப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம்)	-	01
உதவிப் பொதுமுகாமையாளர் (ஓய்வூதியம்/காப்புறுதி) முகாமையாளர்கள்/ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்	-	01
முகாமையாளர் (சான்றுறுதிச் சேவைகள்)	-	01
முகாமையாளர் (காப்புறுதி)	-	01
சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஓய்வூதியம்)	-	01
முகாமையாளர் (மேம்பாடு)	-	01
ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்	-	06
முகாமைத்துவ உதவியாளர்	-	14
அலுவலகப் பணியாளர்	-	02
மொத்தம்		**29**


மாவட்ட அலுவலகங்களின் பதவியணி

பதவி		பதவிகளின் எண்ணிக்கை
சிரேட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	-	06
ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	-	35
முகாமைத்துவ உதவியாளர்	-	23
அலுவலகப் பணியாளர்	-	21
மொத்தம்		**85**

2.6. 2021 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் முன்னேற்றம்.


2021 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்கு மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய அங்கத்தவர்கள் தொடர்பிலான முன்னேற்றம்.

தொடர் இல	மாவட்டம்	2021 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு (அங்கத்தவர்கள்)
01	யாழ்ப்பாணம்	13,389
02	மட்டக்களப்பு	8,865
03	கிளிநொச்சி	7,461
04	குருணாகல்	4,674
05	அம்பாறை	3,908
06	முல்லைதீவு	3,499
07	வவுனியா	3,266
08	திருகோணமலை	2,516
09	மன்னார்	1,954
10	கண்டி	1,370
11	கேகாலை	1,360
12	பதுளை	1,220
13	நுவரெலியா	844
14	மாத்தறை	648
15	காலி	441
16	மாத்தளை	349
17	அநுராதபுரம்	345
18	மொணராகலை	294
19	களுத்துறை	251
20	கொழும்பு	249
21	கம்பஹா	206
22	மாத்தளை	200
23	பொலன்னருவை	134
24	புத்தளம்	127
25	இரத்தினபுரி	80
26	காலி	76
	மொத்தம்	57,726


2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு
(அங்கத்தவர்கள்)
16,000
14,000
12,000
10,000
8,000
6,000
4,000
2,000
0
13,389
8,865
7,461
4,674
3,908
3,499
3,266
2,516
1,954
1,370
1,360
1,220
844
648
441
349
345
294
251
249
206
200
134
127
80
76
Jaffna
Batticaloa
Kilinochchi
Kurunegala
Ampara
Mullaitivu
Vavuniya
Trincomalee
Mannar
Kandy
Kegalle
Badulla
Nuwara Eliya
Matara
Galle
Anuradhapura
Moneragala
Hambantota
Colombo
Kalutara
Gampaha
Matale
Polonnaruwa
Puttalam
Ratnapura
Direct

புதிய அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதன் வருடாந்த முன்னேற்றம்

தொடர் இல.	வருடம்	புதிய ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை	முதல் தவணைப் பணம் (ரூ.)	வருடாந்த தவணை சேகரிப்பு (ரூ.)
01	2012	9,184	6.35	186.45
02	2013	8,769	7.24	150.37
03	2014	15,995	7.66	148.99
04	2015	21,599	13.79	146.38
05	2016	72,351	40.81	148.87
06	2017	63,141	36.84	170.96
07	2018	83,362	52.18	190.46
08	2019	38,543	37.26	198.04
09	2020	25,778	45.07	180.26
10	2021	57,726	128.04	177.57



2.7. 2021 ஆம் ஆண்டில் நலன் செலுத்தல்

2.7. 2021 ஆம் ஆண்டின் கொடுப்பனவுகள்

விபரம்	எண்ணிக்கை	செலவு (ரூபா)
ஓய்வூதியக் கொடுப்பனவு	**32,976**	**356,981,876.00**
மரணப் பணிக் கொடைக் கொடுப்பனவு	**26**	1,584,866.00
அங்கவீனப் பணிக்கொடைக் கொடுப்பனவு	**27**	**713,451.00**
மேலதிக நலன்கள் 5 ஆந் தரப் புலமைப்பரிசில்/க.பொத.த. (சா/த)/க.பொத.த. (உ/த)	**342**	**3,106,499.00**
மொத்தம்	**33,371**	**362,386,692.00**

தேறிய பங்களிப்பு நிதி மீள வழங்குதல்	எண்ணிக்கை	நிதி (ரூபா.)
	649	**18,449,415.29**

2.8 2021 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டுள்ள நிதி

ஆடசேர்ப்பு மற்றும் தவணைச் சேகரிப்பு	பெறுவனவுகள் (ரூபா)
ஆட்சேர்ப்பின் ஆரம்ப தவணைத் தொகை	**128,046,812.00**

2.9. 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் நடமாடும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.

விபரம்	எண்ணிக்கை	செலவு செய்யப்பட்ட நிதி
ஓய்வூதியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்.	107	1,973,814.00

2.10. சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரச்சினைகள்

1. பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட களத்துறை வெளிக்களப் பதவியணியினர் சேவையிலிருந்து விலகுதல் பரவலாகக் காணப்படுவதன் காரணமாக ஊழியர் வந்து செல்லும் போக்குவீதம் உயர்ந்துள்ளதுடன், புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அவர்களைப் பயிற்சியளித்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு நேரிடுதல்.

2. 2021 ஆம் ஆண்டு பூராவும் நிலவிய கொவிட் 19 வைரஸ் பரவலுடன் பயணக் கட்டுப்பாடுகள் அமுலாக்கப்படுதல், பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்படுதல், மக்கள் ஒன்றுகூடும் செயற்பாடுகளினை சமூக இடைவெளியுடன் வரையறுப்பதற்கு நேரிடுதல் மற்றும் மக்களின் வருமான நிலை குறைவடைவதன் காரணத்தினால் ஆண்டில் ஆரம்பத்தில் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு கடினமாகவிருந்தது.

3. கணினி முறைமை உரயிவாறுசெயற்படமை காரணமாக வினைத்திறனுடன் கூடிய சேவைப்பெற்றுக்கொள்வதன்மீது பாதகமான தாக்கங்க றைபடுத்தியது.

03. நிதிப் பிரிவு

கடமைப் பொறுப்பு

- வருடாந்தப் பாதீட்டினைத் தயாரித்தல்.
- வருடாந்த கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல்.
- வருடாந்த கட்டுநிதி அறிக்கைகளைத் தயாரித்தல் (வருடாந்த பாதீட்டுக் கொள்முதலின் கீழ்)
- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல் குறித்த அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல்.
Boc	80274062 Dep.Culter Affears	0 6-Jan-2017	0 6-Jan-2022	40,000,000.00	60 M	14.50%	29,015,890.41	69,015,890.41	5,800,000.00	5,800,000.00
NSB	2/0111/02/88012	31-Jul-2017	31-Jul-2022	388,624,537.10	60 M	13.00%	252,605,949.12	641,230,486.22	50,521,189.82	50,521,189.82
SMIB	SMIB/FD/000787	23-Aug-2017	23-Aug-2022	216,269,869.36	60 M	15.00%	162,202,402.02	378,472,271.38	32,440,480.40	32,440,480.40
SIMB	SMIB/IFD/000811 Elders Pen	0 9-Oct-2017	0 9-Oct-2022	460,000,000.00	60 M	14.50%	333,500,000.00	793,500,000.00	66,700,000.00	66,700,000.00
HDFC	999202000013/1	8-Dec-2017	0 8-Dec-2022	113,000,000.00	60 M	15.50%	87,575,000.00	200,575,000.00	17,515,000.00	17,515,000.00
PB	174600100021179-7	18-Oct-2018	18-Oct-2023	271,481,506.23	60 M	14.00%	190,037,054.36	461,518,560.59	38,007,410.87	38,007,410.87
HDFC	999201000115/20	4-Mar-2021	4-Mar-2022	128,291,000.00	12 M	6.00%	7,697,460.00	135,988,460.00		6,389,946.25
HDFC	999201000115/23	5-May-2021	5-May-2022	40,000,000.00	12 M	6.00%	2,400,000.00	42,400,000.00		1,584,657.53
Total				1,657,666,912.69			1,065,033,755.91	2,722,700,668.60	210,984,081.10	218,958,684.88

Short Terms

Investee /Bank	Certificate No.	Investment			Period	Int. Rate P.A	Total Interest Receivable	Maturity Value	Interest Receivable	
		Date of		Invested Amount						
		Investment	Maturity						2020	2021
HDFC	System	17-May-2021	17-Aug-2021		3 M	5.00%	-	-		-
HDFC	999201000115/30	9-Nov-2021	9-Feb-2022	21,851,000.00	3 M	7.50%	413,073.70	22,264,073.70		237,966.37
HDFC	999201000115/31	15-Nov-2021	15-Feb-2022	3,014,000.00	3 M	7.50%	56,976.99	3,070,976.99		29,107.81
HDFC	JALA-999201000115/32	15-Nov-2021	15-Feb-2022	1,531,000.00	3 M	7.50%	28,942.19	1,559,942.19		14,785.68
HDFC	System-999201000115/33	15-Nov-2021	15-Feb-2022	1,862,000.00	3 M	7.50%	35,199.45	1,897,199.45		17,982.33
HDFC	999201000115/36	15-Dec-2021	15-Jan-2022	11,700,935.00	1 M	7.00%	69,564.46	11,770,499.46		38,148.25
PB	Culture-174600100028247-0	17-Dec-2021	17-Mar-2022	64,971,218.14	3 M	6.00%	961,218.02	65,932,436.16		160,203.00
Total				104,930,153.14			1,564,974.81	106,495,127.95	-	498,193.45

	Investment -FD	Interest Recivable	WHT Payable
QB Balance-Investment FD	1,654,232,844.46	643,002,483.55	32,988,573.31
QB Balance- Culturl	104,971,218.14	23,264,860.53	1,384,372.60
QB Balance- System	1,861,999.92	17,982.36	-
QB Balance- JALA	1,531,000.00	14,785.68	-
Schedule Balance	1,657,666,912.69	219,456,878.33	-
	(104,930,149.83)	(446,843,233.79)	34,372,945.91

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று - ஓய்வூதிய நிதியம்

விவரம்	2021 ரூபா.	2020 ரூபா.
அங்கத்துவப் பங்களிப்பு		
தபால் சேகரிப்பு	164,415,316	144,789,355
வங்கி மற்றும் ஏனைய சேகரிப்பு	137,958,177	76,086,465
மொத்தப் பங்களிப்பு (அ)	**302,373,493**	**220,875,820**
கூட்டுதல் - வட்டி வருமானம்		
நிலையான வைப்புக்கள்	220,263,741	238,562,470
சேமிப்பு வைப்புக்கள்	903,846	1,232,094
பிற (இடர் கடன் II)	-	4,240
பிற (இடர் கடன் III)	756,938	724,042
கலாசார நிதிய வட்டி	-	7,321,309
Intrest Income Jalaya	203,362	37,932
OTHER INCOME-FUND	34,069	
OTHER INCOME-ARASSAWA	5,746	
INTEREST INCOME CULTURAL SSB	152,989	
மொத்த வட்டி (ஆ)	**222,320,691**	**247,882,087**
கழித்தல் - செலவினம்		
ஓய்வூதியக் கொடுப்பனவு	356,981,876	331,553,955
நிதியக் கொடுப்பனவு	18,370,909	27,946,174
பணிக்கொடைக் கொடுப்பனவு	1,584,866	2,135,828
அங்கவீனர் கொடுப்பனவு	713,451	589,719
பங்களிப்பாளர்களுக்கான பயன் கொடுப்ப	3,106,499	2,928,000
தபால் கொமிசன்	(16,205)	(24,360)
ஊக்குவிப்புக் கொடுப்பனவு	49,743,046	11,188,589
PROMOTIONAL PROGRAME	926,015	-
பதவியணியினரின் காப்பீடு	855,000	752,000
வங்கிக் கட்டணங்கள்	19,656	22,720
தபால் கொமிசன்	8,220,766	7,301,104
பிற		185,000
25TH Anivasary expences	**242,679**	
நிறுத்தி வைக்கும் வரி - நிதியம்	-	115,944
நிறுத்தி வைக்கும் வரி - சேமிப்பு	-	-
நிறுத்தி வைக்கும் வரி - கலாசாரம்	-	-
212 கணக்குகளுக்கிடையே மாற்றல்	-	-
மொத்தச் செலவு (இ)	**440,748,557**	**384,694,673**
தேறிய மீதி (அ) +ஆ) - (இ)	**83,945,626**	**84,063,233**

குறிப்புக்கள்:

2021.01.01 - 2021.12.31 வரையிலான மொத்தப் பணச் சேகரிப்பு ரூபா. 302373492.88. ஆகும். இந் நிதியில் அடையாளம் காணப்படாத வைப்புக்களின் முழு மொத்தம் ரூபா. Rs 5757,979 ஆகும்.நடைமுறைப் பொறுப்புக்களாக இது ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது.(23 குறிப்பு)




இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

2015 முதல் 2021 வரை முன்னேற்றம்


இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

மொத்த உறுப்பினர் பணம் கூட்டல் மற்றும் மொத்த நன்மைகள் செலுத்துதல் – 2015 முதல் 2021 வரை ஒப்பீடு




இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை


முழு உறுப்பினர் பணம் கூட்டல் மற்றும் நன்மை கொடுப்பனவுகள் - 2015 முதல் 2021 வரை ஒப்பீடு



புதிய ஆட்சேர்ப்பு (மக்களின் எண்ணிக்கை) - 2015 முதல் 2021 வரை



புதிய ஆட்சேர்ப்பு மொத்தம் (ரூ. மில்லியன்) - 2015 முதல் 2021 வரை



இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
நிதி அமைச்சு
சமுர்த்தி, மனைப்பொருளாதாரம் ,நுண்நிதி , சுயதொழில், தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
முதலீட்டு குழு அறிக்கை

திகதி 2021.11.15

இடம் **தலைமை அலுவலகம், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை**

பங்களிப்பு **சிரேட்ட விரிவுரையாளர், திரு. ஹந்தராகம** (தவிசாளர்) – குழுத் தலைவர்
திரு.கே.ஏ.எஸ்.பீ..களுஆரச்சி (பொது முகாமையாளர்) - குழு உறுப்பினர்
திரு.எஸ்.டப்.லக்ஷ்மன் (பிரதி முகாமையாளர் – நிதி) - குழு உறுப்பினர்
செல்வி டப்.எஸ்.பீ.பிரணாந்து (பொது முகாமையாளர் – நிதி) - குழுச் செயலாளர்

விடயம் 2021.08.13 ஆம் திகதி RDB இல் 03 மாதங்களுக்காக முதலீடு செய்யப்பட்ட ரூபா 11,482,075.00 ஆன தொகை மற்றும் 2021.10.15 ஆம் திகதி PB இல் ஒரு மாத காலப்பகுதிக்காக முதலீடு செய்யப்பட்ட ரூபா.3,000,000.00, ரூபா.1,854,000.84 மற்றும் ரூபா. 1,524,386.73 ஆன தொகை 2021.11.15 ஆம் திகதி முதிர்ச்சியடைவதன் காரணமாக மீள்முதலீடு செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல்.

முதலீட்டு விபரங்கள் **முதலீட்டு வகை** : நிலையான வைப்புகள்

2021.11.15 ஆம் திகதி முதிர்ச்சியடைவதால் கிடைக்கப்பெறும் தொகை : ரூபா .18,042,198.39

புதிய முதலீட்டுத் தொகை : ரூபா .18,041,000.00

வட்டி விகிதம்

வங்கி	காலவெல்லை மற்றும் வட்டி விகிதம்				மொத்த முதலீட்டு சதவீதம் (முதிர்ச்சியடையும் முதலீடுகளின்றி)
	மாதம் 01	மாதங்கள் 03	மாதங்கள் 06	மாதங்கள் 12	
HDFC	7.00%	7.50 %	7.75%	8.00%	17.38%
NSB	4.50%	5.00%	5.25%	5.50%	22.29%
RDB	-	6.50%	6.75%	7.00%	-
SMIB	5.50%	6.10%	6.30%	6.60%	38.78%
PB	5.00%	5.50%	5.75%	6.25%	19.26%
BOC	4.50%	5.00%	5.25%	5.50%	2.29%

<u>பரிந்துரை</u>

இந்த முதலீடுகளின் பின்னர் 2022.03.04 ஆம் திகதியல் மீண்டும் முதலீடொன்று முதிர்ச்சியடைவதற்குள்ளது. ஆகையால் திசெம்பர் மாதத்தில் ஓய்வூதியம் செலுத்துவதற்காக ரூபா.11,634,000.00 ஆன தொகை தேவைப்படுவதுடன், குறித்த தொகையும் இந்த முதிர்ச்சியடையும் முதலீட்டில் சேர்க்கப்படுதல் வேண்டும். இந்த தொகை ஒரு மாத காலம் பொருட்டு முதலீடு செய்யப்படும்.

அதன்படி, முதலீட்டு இடர், அதிக வட்டி விகிதாசாரம் மற்றும் முதலீட்டு சதவீதங்களை கவனத்தில் கொண்டு ரூபா.11,634,000.00 ஆன தொகை 7.00% ஆன சதவீதத்தின் கீழ் ஒரு மாத காலப்பகுதிக்கும், ரூபா.3,014,000.00 ஆன தொகையும், சுயாதீன விற்பனை வலையமைப்பில் பெற்றுக்கொண்ட பங்களிப்பு தொகையான ரூபா.1,531,000.00 ஆன தொகையும், புதிய கணினி முறைமை தாபிப்பதன் பொருட்டு கிடைக்கப்பெற்ற தொகையான ரூபா.1,862,000.00 ஆன தொகையும் 7.50% ஆன சட்டி சதவீதத்தின் கீழ் 03 மாத காலப்பகுதிக்காக இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில் (HDFC) நிலையான வைப்பாக முதலீடு செய்வதற்கு குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

.....	.....	.....	.....
சமன் ஹந்தராகம	கே.ஏ.எஸ்.பீ..களுஆரச்சி	எஸ்.டப்.லக்ஷ்மன்	டப்.எஸ்.பீ.பிரணாந்து
குழுத் தலைவர்	குழு உறுப்பினர்	குழு உறுப்பினர்	குழுச் செயலாளர்

Interest income on Investmens -(Matured in financial year 2021)

Date - Maturity	Investment Type	Investment	Interest	Interest Income for 2021	Maturity Amount	Withdrawel	Withdrawel		Re Investment
							Capital	Intrest	
2021.01.09	FD	21,553,120.79	2,370,843.29	51,963.69	23,923,964.08	6,603,964.08	4,233,120.79	2,370,843.29	17,320,000.00
2021.01.22	FD	11,200,000.00	155,265.75	35,441.10	11,355,265.75	-	-	-	11,355,265.75
2021.02.09	FD	52,488,000.00	694,568.43	294,436.11	53,182,568.43	-	-	-	53,182,568.43
2021.02.13	System	12,910,088.54	170,839.72	79,848.01	13,080,928.26	1,830,926.15	1,660,086.43	170,839.72	11,250,002.11
2021.03.04	FD	176,061,000.00	5,456,685.10	1,869,140.75	181,517,685.10	13,307,685.10	7,851,000.00	5,456,685.10	168,210,000.00
2021.03.16	Culture	62,832,557.47	735,915.57	605,086.14	63,568,473.04	785,132.93	49,217.36	735,915.57	62,783,340.11
2021.04.05	FD	39,919,000.00	144,091.18	144,091.18	40,063,091.18	2,711.39		2,711.39	40,060,379.79
2021.05.05	FD	40,060,379.79	139,936.94	139,936.94	40,200,316.73	200,316.73	60,379.79	139,936.94	40,000,000.00
2021.05.17	System	11,250,000.00	144,015.41	144,015.41	11,394,015.41	-	-	-	11,394,015.41
2021.06.07	JALA	1,500,000.00	5,414.38	5,414.38	1,505,414.38	1,505,414.38	1,500,000.00	5,414.38	-
2021.06.16	Culture	62,783,340.11	751,679.99	751,679.99	63,535,020.10	-	-	-	63,535,020.10
2021.06.28	System	11,394,015.41	44,639.57	44,639.57	11,438,654.98	11,438,654.98	11,394,015.41	44,639.57	-
2021.07.12	FD	17,320,000.00	474,995.07	474,995.07	17,794,995.07	17,794,995.07	17,320,000.00	474,995.07	-
2021.07.15	FD	20,151,000.00	1,712,835.00	915,076.23	21,863,835.00	2,088,839.49	376,004.49	1,712,835.00	19,774,995.51
2021.07.22	FD	11,355,265.75	295,625.78	295,625.79	11,650,891.53	11,650,891.53	11,355,265.75	295,625.78	-
2021.08.09	FD	53,182,567.23	1,450,499.88	1,450,499.88	54,633,067.11	3,714,067.11	2,263,567.23	1,450,499.88	50,919,000.00
2021.08.13	FD	10,681,000.00	801,075.00	491,618.63	11,482,075.00	-	-	-	11,482,075.00
2021.09.09	FD	13,865,000.00	47,103.01	47,103.01	13,912,103.01	13,912,103.01	13,865,000.00	47,103.01	-
2021.09.09	FD	15,475,000.00	52,572.60	52,572.60	15,527,572.60	15,527,572.60	15,475,000.00	52,572.60	-
2021.09.16	Culture	63,535,020.10	760,679.56	760,679.56	64,295,699.66	-	-	-	64,295,699.66
2021.10.15	FD	5,000,000.00	63,013.70	63,013.70	5,063,013.70	2,063,013.70	2,000,000.00	63,013.70	3,000,000.00
2021.10.15	JALA	1,505,414.38	18,972.35	18,972.35	1,524,386.73	-	-	-	1,524,386.73
2021.10.15	System	11,438,654.98	144,158.39	144,158.39	11,582,813.37	11,582,813.37	11,438,654.98	144,158.39	
2021.10.15	System	1,830,926.15	23,074.69	23,074.69	1,854,000.84	-	-	-	1,854,000.84
2021.10.22	JALA	3,000,000.00	195,000.00	157,068.49	3,195,000.00	3,195,000.00	3,000,000.00	195,000.00	-
2021.11.09	FD	21,579,000.00	271,954.52	271,954.52	21,850,954.52	-	-	-	21,851,000.00
2021.11.13	FD	11,482,075.00	155,243.95	155,243.95	11,637,318.95	3,318.95		3,318.95	11,634,000.00
2021.11.15	FD	3,000,000.00	14,013.70	14,013.70	3,014,013.70	13.70		13.70	3,014,000.00
2021.11.15	JALA	1,524,386.73	7,120.77	7,120.77	1,531,507.50	507.50		507.50	1,531,000.00
2021.11.15	System	1,854,000.84	8,660.47	8,660.47	1,862,661.31	661.31		661.31	1,862,000.00
2021.12.15	FD	11,634,000.00	66,935.34	66,935.34	11,700,935.34	0.34		0.34	11,700,935.00
2021.12.17	Culture	64,295,699.66	921,718.55	921,718.55	65,217,418.21	248,732.20		248,732.20	64,971,218.14
		847,660,512.93	18,299,147.66	10,505,798.96	865,959,660.59	117,457,335.62	103,841,312.23	13,616,023.39	748,504,902.58

நிதிச் சிறப்பம்சங்கள்- கடந்த 10 ஆண்டுகள் (FY2011- FY2021)

Description		ஆண்டுகள்										
		2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
புதிய பதிவுகள் (மூக்கு))	மூக்கு	37,799	9,129	8,754	16,068	21,271	71,364	63,674	83,350	38,591	25,783	32,078
Avg. no. of members for pension	மூக்கு	9,893	12,474	15,821	20,157	22,629	25,263	27,080	28,742	30,598	31,769	32,976
New enrolment Value	ரூ	837,271.00	4,499,537.00	1,472,800.00	2,832,327.00	13,785,940.00	40,810,755.00	36,836,803.00	52,184,761.00	37,259,640.00	37,805,283.00	80,919,149.00
உறுப்பினர்களின் தொகுப்பு	ரூ	259,909,066.00	220,105,888.00	159,924,901.38	153,469,885.29	142,449,174.00	121,059,232.00	160,124,607.00	153,456,710.00	198,401,715.00	183,070,537.00	209,578,265.00
மொத்த சேகரிப்பு	ரூ	260,746,337.00	224,605,425.00	161,397,701.38	156,302,212.29	156,235,114.00	161,869,987.00	196,961,410.00	205,641,471.00	235,661,355.00	220,875,820.00	290,497,414.00
உறுப்பினர் கொடுப்பனவுகள்												
ஓய்வூதியம்	ரூ	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00	64,449,122.00
பணிக்கொடை	ரூ	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00	3,170,718.00
நிதியக்	ரூ	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00	3,355,236.00
இயலாமை	ரூ	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00	550,060.00
Arassawa Benefits	ரூ	-	-	-	-	-	57,500.00	2,536,568.00	4,842,660.00	2,775,394.00	2,928,000.00	3,106,499.00
ஊக்கத்தொகை	ரூ	-	3,484,739.00	2,043,704.51	2,052,379.36	-	1,274,872.00	880,610.00	9,439,135.00	15,649,535.00	11,188,589.00	49,743,046.00
மொத்த கொடுப்பனவுகள்	ரூ	71,525,136.00	75,009,875.00	73,568,840.51	73,577,515.36	71,525,136.00	72,857,508.00	74,942,314.00	85,806,931.00	89,950,065.00	85,641,725.00	124,374,681.00
கருவூல நிதி ரசீதுகள்	ரூ	62,603,000.00	71,138,900.00	81,066,426.00	81,276,400.00	105,400,000.00	107,370,000.00	111,176,000.00	129,009,000.00	139,991,052.00	121,777,365.00	125,609,000.00
முதலீடுகள்	ரூ	1,340,541,216	1,519,318,628	1,617,153,979	1,717,590,837	1,818,136,272	1,874,773,791	1,941,057,650	1,937,822,662	1,870,775,003	1,741,510,030	36,565,932.00
முதலீடுகள் மீதான வட்டி	ரூ	141,207,970	161,075,348	237,574,919	208,879,725	165,282,624	161,431,297	216,409,371	261,591,395	259,919,300	238,562,470	220,263,741
ஆண்டு இறுதியில் பணியாளர்களின் எண்ணிக்கை		124	104	121	168	169	160	163	179	161	156	166

கணக்காய்வு குழு அறிக்கை

2021 ஆம் ஆண்டில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நல்லாளுகைக்கான வழிகாட்டல் கோவையில் 7.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள், 2010.12.14 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் 55 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் 2021.11.16 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரசாங்கத்திற்குரிய நிறுவனங்களை தாபிக்கப்பட்ட ஆளுகைக்கான வழிகாட்டல் கோவையில் 4.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் என்பனவற்றுக்கமைவாக நடாத்தப்பட்டுள்ளது.

2021 ஆண்டின் கணக்காய்வு குழு பின்வரும் உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்துள்ளது.

திரு.கே.எம்.குமாரசிறி	-குழுவின் தலைவர்	பணிப்பாளர் (திறைசேரி பிரதிநிதியாளர்)
கலாநிதி திரு. தம்மிக்க திசாநாயக்க	-குழுவின் உறுப்பினர்	பணிப்பாளர்
சட்டத்தரணி திரு. ஜானக்க ரத்நாயக்க	-குழுவின் உறுப்பினர்	பணிப்பாளர்
திருமதி.டி.எம்.ஜீ.பீ.மல்காந்தி	- அவதானிப்பாளர்	பிரதான உள்ளக கணக்காய்வாளர் –நேர்வரிசை அமைச்சு
திருமதி.டீ.எல்.பீ.குணதிலக்க /திரு.எம்.ஆர்.பீ.பீரிஸ்	- அவதானிப்பாளர்	கணக்காய்வு அதிகாரி –தேசிய கணக்காய்வு அலுவலகம்

அரச ஓய்வூதியம் பெறாத இலங்கைப் பிரஜைகளின் எதிர்காலப் பாதுகாப்பிற்காக ஓய்வூதியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் நிலைத்தன்மைக்கு காரணங்களாக அமைகின்ற, தொழிற்பாடுகள், நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல் மற்றும் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் கணக்காய்வுக் குழுவின் முதன்மைக் கடமைப்பொறுப்பாகும். அதன்படி ஓய்வூதிய திட்டம் பொருட்டு பங்களிப்பாளர்களை ஆட்சேர்ப்புச்செய்தல், தவணைத்தொகை

சேகரிப்பதற்கமைவாக செயலாற்றுகையின் பரிசோதனை, ஓய்வூதியம் அடங்கலாக நலன்களைக் கொடுப்பனவுச் செய்தல், முதலீடுகளின் படி பங்களிப்புத் தொகையை ஈடுபடுத்தல் தொடர்பான பரிசோதனை, மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினங்கள் தொடர்பான பரிசோதனை, அத்துடன் நிதி ஒழுங்குவிதிகள், திறைசேரி சுற்றறிக்கை, வழிகாட்டல்கள் மற்றும் சபை அறிமுகப்படுத்தியுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் முறைமைகளில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு இசைவிணக்கம் தொடர்பான பரிசோதனை செய்தலும், கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புகளுக்கமைவாக பரிந்துரைகள் வழங்குதலும் கணக்காய்வு குழுவால் மேற்கொள்ளப்படுகிறது.

தாபனத்துடனான நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நிருவாகம், நிதி மற்றும் தொழில்பாட்டு நடவடிக்கைகள் உள்ளடங்கும் வகையில் வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை அங்கீகரித்தல் மற்றும் கணக்காய்வு திட்டம் நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் ஆராய்தலும் கணக்காய்வுக் குழுவின் கடமைப்பொறுப்பாகும்.

2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் மத்தியிலும், சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி இணையத்துடன் நேரடிதொடர்பு மூலம் கணக்காய்வுக் கூட்டங்களை நடாத்த வேண்டி ஏற்பட்டது. இந்த நிலைமை மத்தியிலேனும் பின்வரும் திகதிகளில் கணக்காய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

முதலாவது கணக்காய்வுக் கூட்டம்	2021.02.24
இரண்டாவது கணக்காய்வுக் கூட்டம்	2021.07.13
மூன்றாவது கணக்காய்வுக் கூட்டம்	2021.10.07
நான்காவது கணக்காய்வுக் கூட்டம்	2021.12.23

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் உயர் செயலாற்றுகையை அடைந்துக்கொள்வதற்கு இயன்றுள்ளது. அதற்கு கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டலும் ஏதுவாக அமைந்து என்று நான் நம்புகின்றேன்.

கணக்காய்வுக் குழுவின் பொருட்டு,

கே.எம்.குமாரசிறி
தவிசாளர்
கணக்காய்வுக் குழு
2022.02.28

எல்எஸ்டப்/டீ/ எஸ்எஸ்பீ/எப்எஸ்/2021 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி

தலைவர்
சமூகப் பாதுகாப்புச் சபை

சமூகப் பாதுகாப்புச் சபையின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ரீ.ஜி.ஐ.பத்மிணி
சிரேட்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதிக்குப் பதிலாக

பிரதிகள்:- 1.செயலாளர் - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

2.செயலாளர் - நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு

தலைவர்
சமூகப் பாதுகாப்புச் சபை

சமூகப் பாதுகாப்புச் சபையின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் அத்துடன், ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூகப் பாதுகாப்புச் சபையின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஓய்வூதிய திட்டங்களில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டுள்ள உறுப்பினர்களால் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா.5,757,980 ஆன தவணைத் தொகை தொடர்பில், அங்கத்தவர்களின் அடையாளம் காணப்பட்டு அங்கத்தவர்களின்

தனிப்பட்ட கணக்குகளில் கணக்கு வைப்பதற்குப் பதிலாக ஏனைய பொறுப்புகளின் கீழ் அடையாளம் காணப்பட்டு வைப்புகளாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்விற்கான ஆண்டில் ஏனைய பொறுப்புகள் மேற்படி தொகையில் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவுறுத்தப்படினும், தற்போது பயன்படுத்துகின்ற ரூபா.787,540 ஆன தொடர்பாடல் உபகரணங்கள், ரூபா.10,096,197 ஆன தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், ரூபா.23,063,419 ஆன கணினி மென்பொருட்கள், ரூபா.9,932,023 ஆன இயந்திர உபகரணங்கள் போன்ற நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பில், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கும், அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் பொருட்டான மதிப்பிடப்பட்ட குறைப்பாடுகளை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 08 பிராகாரம் மீள்திருத்தம் செய்து நிதிக் கூற்றுகளில் காண்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அங்கத்துவம் பெற்றிருந்த அங்கத்தவர்களிடையே செயலற்ற நிலைமையில் காணப்பட்ட அங்கத்தவர்களை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீளாய்விற்கான ஆண்டில் வழங்கியிருந்த ரூபா.மில்லியன் 2.2 ஆன தொகை அரச ஒதுக்கீடுகளிலிருந்து செயலற்ற நிலைமையில் காணப்படும் அங்கத்தவர்களை அறிவுறுத்துவதற்கு ரூபா.1,422,576 ஐ செலவிடப்பட்டிருந்தது. தொழில்பாட்டு செலவினம் வருமான செலவினமாக வருமானத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது, நடைமுறையல்லாத சொத்துக்களின்கீழ் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்விற்கான ஆண்டில் சொத்துக்கள் மற்றும் தொழில்பாட்டு மிகை குறித்த அளவில் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஓய்வூதிய திட்டம் பொருட்டு புதிய கணினி மென்பொருள் முறைமை தாபிக்கும் ஒப்பந்தம் பொருட்டு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை ரூபா.1,090,250 ஐ செலவிடப்படினும், மென்பொருள் முறைமை தாபித்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும், குறித்த கணினி முறைமைக்காக செலவிடப்பட்டிருந்த செலவினம் மேற்கொள்கின் வேலையாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இற்கு முரணாக நடைமுறையல்லாத சொத்துக்களின்கிழ் கணினி மென்பொருளாக கணக்கு வைக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 25% என்ற வகையில் தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் சபையில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மேற்படி அளவில் அதிகமாகவும், திரட்டிய பற்றாக்குறை ரூபா.783,337 ஆல் அதிகமாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 சபையின் 2021 ஆம் ஆண்டின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட, சபையின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களை அடிப்படையாகக்கொண்டும், இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், அந்த விடயம் என்னால் அறிக்கையிடல் தேவையானதாகும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்-வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள தாக்கங்களைத் தவிர்ந்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் சபை பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளமை தொடர்பாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது

சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செய்ற்பட்டுள்ளமை தொடர்பாக,

சட்டங்கள்- விதிகள் தொடர்	அவதானிப்புகள்
1996 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை சட்டம் 15(2) பிரிவு	நலன்கள் உரித்தற்றவுடன், அது தொடர்பாக சபையால் குறித்த அங்கத்தவரிடம் அறிவிக்கப்படுதல் வேண்டு-மாயினும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.672,733 தொகை தொடர்பில், செயலற்ற நிலைமையில் காணப்பட்ட அங்கத்தவர்களிடம் நலன் தொகை கிடைக்கப்பெறாது என்று அறிவிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 2015 ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் செயலற்ற நிலையில் காணப்பட்ட அங்கத்தவர்கள் தொடர்பாகவும் அடையாளம் காண்பதற்கு இயலாதிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயற்பட்டுள்ளமை தொடர்பாக,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தாமை தொடர்பாக,

(அ) ஓய்வூதிய திட்டத்தின்கீழ் அங்கத்துவம் பெற்றிருந்த 882,665 அங்கத்தவர்களுக்கிடையில், செயலற்ற நிலைமையில் காணப்பட்ட 672,733 அங்கத்தவர்களை செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டுவரும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு, மீளாய்விற்கான ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. மில்லியன் 2.2 தொகை அரசாங்கத்தின் ஒதுக்கீடு-களிலிருந்து அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அஞ்சல் கட்டணங்கள் ஆகிய தொழில்பாட்டு செலவினமாக ரூபா.1,422,576 ஐ செலவிடப்பட்டிருப்பினும், செயலற்ற நிலைமையில் காணப்பட்ட அங்கத்தவர்களில் 03 பேர் மட்டுமே செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரமுடிந்துள்ளது. இதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் நிறுத்தப்பட்டிருந்ததுடன். ரூபா.777,424 ஆன எஞ்சிய ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு இயலாதிருந்தது.

(ஆ) பெறுகை திட்டத்தின்படி மீளாய்விற்கான ஆண்டில் கட்டிடங்களை நிருமாணிப்பதற்காக ரூபா.5,000,000 மற்றும் தளவாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்வதற்காக ரூபா.3,800,000 ஆன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பெறுகை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் தாமதங்கள் காரணமாக ஒழுங்குமறையில் 100% மற்றும் 48% என்ற வகையில் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) சஹன, திலின, இசுர, சரண, தனலக்ஷ்மி, சுரகும மற்றும் ஆரஸ்ஸாவ என்ற வகையில் 07 ஓய்வூதியம் மற்றும் நலன் திட்டங்கள் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சபையால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 05 திட்டங்களின் பொருட்டு அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் 2012 செப்தெம்பர் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது சுரக்கும மற்றும் ஆரஸ்ஸாவ ஓய்வூதிய திட்டங்கள் மட்டும் நடைமுறைப்பட்டதுடன், குறித்த 02 திட்டங்கள் பொருட்டு 446,444 அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்திருப்பினும், அதில் மீளாய்விற்கான ஆண்டின் இறுதியில் செயற்பாட்டு நிலையில் காணப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 100,617 அல்லது 22% மட்டுமே ஆகும். உறுதியின் கிழ் நலன்கள் கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் தவணைகள் செலுத்துவதை தவறவிடப்பட்டிருந்த அங்கத்தவர்கள் தொடர்பில் தகவல்களை காலோசிதமாக பெற்றுக்கொள்ளாமை காரணமாக குறித்த நபர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படவில்லை. இந்த நிலைமை காரணமாக செயலற்ற நிலையில் காணப்படுகின்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. தவணை செலுத்தும் போது தவறவிடுதல் ஏற்படுகையில் அந்த நிலைமை தொடர்பாக அங்கத்தவர்களை அறிவுறுத்தப்பட்டிருப்பின், தவறுதல் போன்ற செயலற்ற நிலைமை ஏற்படுதலை தவிர்ப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கலாம். ஆயினும், உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளாத காரணத்தால் செயலற்ற நிலையில் காணப்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகியுள்ளது.

(ஆ) அங்கத்துவம் செயலற்று போதல் அல்லது அங்கத்துவம் இரத்துச் செயதல் போன்றவற்றால் 25% அல்லது அதற்கு மேலதிகமாக தவணை தொகை செலுத்திய அங்கத்தவர்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள், செலுத்தப்பட்ட தவணை தொகையில் ரூபா.மில்லியன் 180.7 ஐ மீள பெற்றுக்கொள்ளும் செல்நெறி அவதானிக்கப்பட்டது. குறித்த அங்கத்தவர்கள் விலகிச் செல்வதற்குப் பதிலாக அங்கத்துவர்களை மேலும் தக்கவைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதற்கு சபை தவறியதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

(இ) கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதி பங்களிப்புடன் சபையால் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியிருந்த கலைஞர்கள் பொருட்டான ஓய்வூதிய திட்டத்திற்கு, கலாச்சார அலுவல்கள் அமைச்சு ரூபா.மில்லியன் 94 ஐ வழங்கியிருந்தது. அந்தப் பணத்தொகை வங்கியின் நிலையான வைப்புகளில் முதலீடு செய்து மீளர்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியத்தின் மீதி ரூபா.மில்லியன் 104.97 வரை அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், ஓய்வூதிய திட்டத்தின் பொருட்டு 2017-2021 காலப் பகுதியில் 234 கலைஞர்களை மட்டும் அங்கத்தவர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதிலும் 142 கலைஞர்களது அங்கத்துவம் செயற்ற நிலையில் காணப்படினும், இத்திட்டத்தின்கீழ் நடைமுறையில் செயல்பாட்டு நிலையில் காணப்பட்ட அங்கத்தவர்கள் எண்ணிக்கை 92 போன்ற மிக குறைவான நிலையில் காணப்பட்டது.

(ஈ) சபையின் பிரதான அலுவலகம் பராமரிப்பதற்காக சபையின் நிதியத்தில் ரூபா.மில்லியன் 195 ஐ செலுத்தப்பட்டு இலக்கம் 18, ராஜகிரிய வீதி, ராஜகிரியவில் அமைந்துள்ள கட்டிடம் 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றாது ரூபா.மில்லியன் 165 ஆன அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதி விஞ்சி, அதிக விலையில் சொத்துக்களை கொள்வனவு செய்ததன் காரணமாக சபையிடம் ரூபா.மில்லியன் 30 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. அது நிதிசார் முறைக்கேடு அல்ல என்று கணக்காய்வில் அகற்றப்பட இயலாது என்பதுடன். 09 ஆண்டு காலப்பகுதி விஞ்சியிருப்பினும், அதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்புகளுக்கு எதிராக சட்ட அலுவல்களை மேற்கொண்டு நட்டத்தை சீராக்கி கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) 2017 ஆம் ஆண்டில் பெறுகை திட்டம் படி சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய திட்டத்திற்கு புதிய மென்பொருள் முறைமை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா.12,511,000 தொகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் 05 ஆண்டுகள் கடந்திருப்பினும், இந்த கணினி முறைமை தாபிப்பதற்கு தவறியிருந்தமையால், சபையின் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களில் தொழில்பாட்டு நடவடிக்கைகளை முறையாக பராமரிப்பதற்கு இயலாதிருந்தது.

டப்.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி